Australian Government

COVID-19 VACCINATION

# ‘ஸ்பைக்வாக்ஸ் (மொடெர்னா)’கோவிட்-19 தடுப்பூசி’-யைப் பற்றிய தகவல்கள்

கடைசிப் புதுப்பிப்பு: 15 செப்டம்பர் 2021

## இந்தத் தடுப்பூசியைப் பற்றி

**மொடெர்னா** என்பது ‘கோவிட்-19’ காரணமாக நோய்வாய்ப்படுவதிலிருந்து மக்களைத் தடுக்க இயலுமான ஒரு தடுப்பூசி மருந்தாகும். பொதுவாக, 4-6 வார கால இடைவெளியில் கொடுக்கப்படும் இரண்டு மருந்தளவுகள் தேவை (விசேட சூழல்களில் இந்த இடைவெளி இன்னும் நீண்டதாக இருக்கலாம்). ‘மொடெர்னா’ ‘கோவிட்-19’ தடுப்பூசியில் உயிருள்ள வைரஸ் எதுவும் இல்லை, மற்றும் இதனால் உங்களுக்குக் ‘கோவிட்-19’ நோயைக் கொடுக்க இயலாது. ‘ஸார்ஸ்-கொவ்-2’ வைரஸ்-இன் ‘முள் புரதம்’ (spike protein) என்று சொல்லப்படும் முக்கியமான பகுதியின் மரபணுக் குறியீட்டினை இது கொண்டுள்ளது. இந்தத் தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு, இந்த முள் புரதத்தின் பிரதிகளை உங்களுடைய சரீரம் உருவாக்கும். இதற்குப் பிறகு ‘ஸார்ஸ்-கொவ்-2’எனும் ‘கோவிட்-19’ நோயைத் தோற்றுவிக்கும்வைரஸ்-ஐ அடையாளம் கண்டு அதனோடு போரிட உங்களுடைய நோயெதிர்ப்பு முறைமை கற்றுக்கொள்ளும். இந்த மரபணுக் குறியீட்டினை சரீரம் விரைவில் நொறுக்கிவிடும்.

‘கோவிட்-19’-ஐத் தடுக்க, இந்தத் தகவல் ஏட்டில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ள ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர,‘கோவிட்-19’ தடுப்பூசிக்குத் தகுதிபெறும் ஒவ்வொருவரும் தடுப்பூசியை இட்டுக்கொள்ளவேண்டும். தடுப்பூசியை இட்டுக்கொள்வது சுயவிருப்பாகும். ‘கோவிட்-19’ தடுப்பூசியை இட்டுக்கொள்வதைப் பற்றி உங்களுக்குக் கவலைகள் அல்லது கேள்விகள் எதுவும் இருப்பின், தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கு முன்பாக அவற்றைப் பற்றி உங்களுடைய நோயெதிர்ப்புத்-திறனேற்றல் சேவை வழங்குநர் மற்றும்/அல்லது உங்களுடைய பொது மருத்துவ(GP)ருடன் நீங்கள் கலந்து பேசலாம்.

## இந்தத் தடுப்பூசி மருந்தின் பலன்கள்

12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் ‘கோவிட்-19’ நோயைத் தடுப்பதில் ‘மொடெர்னா’ செயலூக்கம் உள்ளது என்று பெரும்

மருத்துவ-சோதனை முயற்சிகள் காண்பித்துள்ளன. தடுப்பூசியை இட்டுக்கொள்ளாதவர்களை விட, 'மொடெர்னா'-வின் இரண்டு மருந்தளவுகளை இட்டுக்கொண்ட வயதுவந்தவர்களுக்குக் 'கோவிட்-19'-இல் இருந்து நோய்வாய்ப்படும் சாத்தியம் 94 சதவீதம் குறைவாக இருந்தது. 65 வயதிற்கு மேற்பட்டவர்களிலும் (86%), 12-17 வயதிற்கு இடைப்பட்ட வளர்-இளம்-பருவத்தினரிலும் இந்தத் தடுப்பூசி செயலூக்கம் உள்ளதாக இருந்தது.

முதல் மருந்தளவை இட்டுக்கொண்ட பிறகு ஏறத்தாழ இரண்டு வாரங்களிலிருந்து 'கோவிட்-19'-இற்கு எதிரான பாதுகாப்பு துவங்குகிறது. ஒரு மருந்தளவினால்சிறிது பாதுகாப்பினைக் கொடுக்க இயலுமாகலாம் எனும் அதே வேளை, அந்தப் பாதுகாப்பு குறுகியதொரு காலத்திற்கு மட்டுமே நீடிக்கக்கூடும். இரண்டு மருந்தளவுகள் அனுகூலமான பாதுகாப்பினைக் கொடுக்கும். எவ்வொரு தடுப்புமருந்தும் 100 சதவீதம் செயலூக்கம் மிக்கதல்ல, ஆகவே தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகும் 'கோவிட்-19' தொற்று ஏற்பட்டு அதன் காரணமாக நீங்கள் நோய்வாய்ப்படலாம் என்பது சாத்தியம். 'மொடெர்னா'-விலிருந்து கிடைக்கும் பாதுகாப்பு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்பது எமக்குத் தெரியாது. இதைப் பற்றி காலப் போக்கில் எமக்கு மேலும் தெரியவரும். இந்த வைரஸ்-இன் பரவலைத் தடுப்பதில் 'கோவிட்-19' தடுப்பூசிகள் எந்த அளவிற்கு செயலூக்கம் உள்ளவை என்பது எமக்குத் தற்சமயம் துல்லியமாகத் தெரியாது. தடுப்பூசியை இட்டுக்கொண்டவர்களுக்கும் 'கோவிட்-19' நோயைத் தோற்றுவிக்கும் வைரஸ்-தொற்று ஏற்படலாம், மற்றும் அவர்களுக்கு அறிகுறிகள் ஏதும் இல்லாவிட்டால் கூட, அல்லது மிதமான அறிகுறிகளே ஏற்பட்டால் கூட, இப்போதும் அவர்களால் இந்த வைரஸ்-ஐ மற்றவர்களுக்குக் கடத்த இயலும் என்பது இதன் அர்த்தமாகும்.

ஆகவேதான் பின்வருவனவற்றைப் போன்ற தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டியது முக்கியமாகிறது:

- உடல் ரீதி விலகல்
- கைகளைக் கழுவல்
- முகக் கவம் ஒன்றை அணிதல்
- 'கோவிட்-19' நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளல் மற்றும் உங்களுடைய மாநிலம்/எல்லைப்பகுதியினால் வேண்டப்படுவதைப் போல நோய்க்காப்புத்-தடை/தனிமையில் இருத்தல்.

'மொடெர்னா'-வின் இரண்டு மருந்தளவுகளை நீங்கள் இட்டுக்கொண்டிருந்தாலும், உங்களுடைய உள்ளூர்ப் பகுதி சுகாதார அதிகாரத்தின் பிரகாரமான சோதனைக்குரிய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் அறிகுறிகள் (உதாரணமாக, காய்ச்சல், இருமல், தொண்டை வலி) உங்களுக்கு இருந்தால், நீங்கள் 'கோவிட்-19' நோயறிவுச் சோதனை ஒன்றை இப்போதும் மேற்கொள்ளவேண்டும்.

## இந்தத் தடுப்பூசியை யாரால் பெற இயலும்?

12 மற்றும் இதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் 'ஸ்பைக்வாக்ஸ் (மொடெர்னா)' பயன்படுத்தப்படுவதற்கான தற்காலிக அங்கீகாரத்தினை 'மருத்துவ சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகம்' (The Therapeutic Goods Administration (TGA)) அளித்துள்ளது.

## இந்தத் தடுப்பூசியை யார் இட்டுக்கொள்ளக் கூடாது

பின் வரும் நிலைகள் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால் இந்தத் தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொள்ளக் கூடாது:

- ‘mRNAகோவிட்-19’ தடுப்பூசி (அதாவது ‘மொடெர்னா’ அல்லது ‘கொமிர்நாட்டி (ப்ஃபைசர்)) ஒன்றின் முந்தைய மருந்தளவு ஒன்றின் காரணமாக ‘ஆனஃபிலாக்ஸிஸ்’ எனும் தீவிர ஒவ்வாமை (இது ஒரு வகையான கடும் ஒவ்வாமை எதிர்வினை) உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- ‘போலிஈதைலீன் க்ளைகோல்’ (polyethylene glycol (PEG)) உட்பட, இந்தத் தடுப்பூசியில் அடங்கியுள்ள எவ்வொரு வஸ்துவையும் எதிர்கொண்டதன் காரணமாக உங்களுக்கு ‘ஆனஃபிலாக்ஸிஸ்’ எனும் கடும் ஒவ்வாமை ஏற்பட்டிருந்தால்
- ‘mRNAகோவிட்-19’ தடுப்பூசி (அதாவது, ‘மொடெர்னா’ அல்லது ‘ப்ஃபைசர்’) ஒன்றின் முந்தைய மருந்தளவு ஒன்றின் காரணமாக ஏற்பட்டது என்று சொல்லப்படும்‘மையோகார்டைட்டிஸ்’ மற்றும்/அல்லது ‘பெரிகார்டைட்டிஸ்’ எனும் இதய அழற்சிகள் உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- அனுபவம் வாய்ந்த நோயெதிர்ப்புத்-திறனேற்றல் சேவை வழங்குநர் அல்லது சிறப்பு மருத்துவர் ஒருவருடைய மீளாய்விற்குப் பிறகு, வேறொரு காரணம் அடையாளம் காணப்படாத நிலையில்,‘mRNAகோவிட்-19’ தடுப்பூசி (அதாவது, ‘மொடெர்னா’ அல்லது ‘ப்ஃபைசர்’) ஒன்றின் முந்தைய மருந்தளவு ஒன்றின் காரணமாக ஏற்பட்டது என்று சொல்லப்படும் மற்ற எவ்வொரு பாரதூரமான நிகழ்வும் உங்களுக்குஏற்பட்டிருந்தால்.

## தடுப்பூசி இட்டுக்கொள்வதற்கான முன்னெச்சரிக்கைகள்

குறிப்பிட்ட சில நிலைகள் உள்ளவர்களுக்கு, தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு 30 நிமிடம் வரை கண்காணிப்பிற்காகக் காத்திருப்பது, அல்லது ஒவ்வாமை வல்லுநர் ஒருவருடன் கலந்து பேசுவது போன்ற கூடுதல் முன்னச்சரிக்கைகள் தேவைப்படலாம். பின் வருவன உங்களுக்கு ஏற்பட்டிருந்தால், அதை உங்களுடைய நோயெதிர்ப்புத்-திறனேற்றல் சேவை வழங்குநருக்குச் சொல்லுங்கள்:

- **நீங்கள் முன்பு இட்டுக்கொண்ட மருந்தளவு ஒன்றின் காரணமாக**, அல்லது‘mRNA கோவிட்-19’ தடுப்பூசி ஒன்றிலுள்ள (உதாரணமாக ‘மொடெர்னா’ அல்லது ‘ப்ஃபைசர்’) செய்பொருள் ஒன்றின் காரணமாக,**ஒவ்வாமை எதிர்வினை** ஒன்று உங்களுக்கு ஏற்பட்டிருந்தால்
- **மற்ற தடுப்பூசிகள் அல்லது மற்ற மருந்துகளின் காரணமாக உங்களுக்கு ‘ஆனஃபிலாக்ஸிஸ்’(கடும் ஒவ்வாமை) ஏற்பட்டிருந்தால்**. அதே போன்ற செய்பொருள்கள் எதுவும் நீங்கள் பெறப்போகும் தடுப்பூசி மருந்தில் இல்லை என்பதை உங்களுடைய மருத்துவரால் சோதித்து உறுதிப்படுத்த இயலும்
- சிகிச்சையைத் தேவைப்படுத்தும் மற்றும் திரும்பத் திரும்ப ஏற்படும் ‘ஆனஃபிலாக்ஸிஸ்’ (கடும் ஒவ்வாமை)-யுடன் கூடிய உறுதிப்படுத்தப்பட்ட ‘மேஸ்ட்டோசைட்டோசிஸ்’ என்று சொல்லப்படும் நிலை (நோயெதிர்ப்புக் கலன்(cell)களின் திரட்சி) உங்களுக்கு இருந்தால்

**இரத்தக் கசிவுக் கோளாறு ஒன்று உங்களுக்கு இருந்தால்**, அல்லது **இரத்த-மெலிதாக்கி மருந்து** (anticoagulant) எதையும் நீங்கள் உட்கொண்டுவந்தால் அதை உங்களுடைய நோயெதிர்ப்புத்-திறனேற்றல் சேவை வழங்குநருக்குத் தெரியப்படுத்துங்கள். தசைக்குள்ளாக இடப்படும் ஊசி-மருந்து ஒன்றை செலுத்திக்கொள்வது உங்களுக்குப் பாதுகாப்பானதுதானா என்றும், ஊசி மருந்தினை உங்களுக்கு இடுவதற்கான

மிகச் சிறந்த நேரத்தினைத் தெரிவு செய்யவும் உங்களுடைய நோயெதிர்ப்புத்-திறனேற்றல் சேவை வழங்குநரால் உதவ இயலும்.

## தடுப்பூசி இட்டுக்கொள்வதற்கு முன்பாக கலந்தாலோசனை செய்யப்படவேண்டிய விசேட சூழல்கள்

### 'மொடெர்னா'-விற்கான முன்னெச்சரிக்கை நிலைகள் உள்ளவர்கள்

பின் வரும் நிலைகளில் எதற்குமான வரலாறு உள்ளவர்கள் 'மொடெர்னா'-வைப் பெறலாம், ஆனாலும், பொது மருத்துவர்(GP), நோயெதிர்ப்புத்-திறனேற்றல் வல்லுநர் அல்லது இதய நோய் நிபுணர் ஒருவரிடமிருந்து தடுப்புசியைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் சிறந்த நேரம் எது மற்றும் கூடுதல் முன்னச்சரிக்கைகள் எதுவும் சிபாரிசு செய்யப்படுகின்றனவா என்பதைப் பற்றிய அறிவுரையை நாடவேண்டும்:

- சமீபத்தில் (உதாரணமாக, கடந்த ஆறு மாதங்களுக்குள்ளாக) ஏற்பட்ட, அல்லது தற்போது இருக்கும் இதய அழற்சி நோய் (உதாரணமாக, 'மையோகார்டைட்டிஸ் (myocarditis), பெரிகார்டைட்டிஸ் (pericarditis) மற்றும் 'எண்டோகார்டைட்டிஸ்' (endocarditis))ஆகிய நோய்கள் உள்ளவர்கள்
- தீவிரமான 'ருமாட்டிக் ஃபீவெர்' (rheumatic fever) எனப்படும் இதய-அழற்சி(அதாவது, தீவிர இதயத் தசை அழற்சியுடன் கூடியது) உள்ளவர்கள், அல்லது தீவிர 'ருமாட்டிக் ஹார்ட்டிசீஸ்' (rheumatic heart disease)எனப்படும் இதய நோய் உள்ளவர்கள்
- கடுமையாக சீர்குலைவு அடைந்த இதய செயலிழப்பு ஏற்பட்டிருப்பவர்கள்

### பலஹீனமடைந்துவிட்ட நோயெதிர்ப்பு முறைமைகள் உள்ளவர்கள் (immunocompromise)

தமது நோயெதிர்ப்பு சக்தியைப் பாதிக்கும் மருத்துவ நிலை ஒன்று உள்ளவர்கள் 'இம்யூனோ-காம்ப்ரமைஸ்' எனப்படும் பலஹீனமுற்ற நோயெதிர்ப்பு முறைமைகள் இருப்பவர்களில் உள்ளடங்குவார்கள்.தமது நோயெதிப்பு முறைமைகளை பலஹீனப்படுத்தும் மருந்துகளை எடுத்துக்கொண்டிருக்கக்கூடியவர்களும் இதில் உள்ளடங்குவர்.

இம்யூனோ-காம்ப்ரமைஸ்' எனும் பலஹீனமுற்ற நோயெதிர்ப்பு முறைமைகள் இருப்பவர்கள் 'கோவிட்-19' தடுப்பூசி மருந்து ஒன்றை இட்டுக்கொள்வதை ஆஸ்திரேலிய அரசாங்கம் வலுவாய் சிபாரிசு செய்கிறது. 'மொடெர்னா' உயிருள்ள தடுப்பூசி மருந்து அல்ல. நோயெதிர்ப்புத் திறன் பலஹீனமடைந்தவர்களில் இது பாதுகாப்பானது.

HIV-யுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் உள்ளடங்க, பலஹீனமுற்ற நோயெதிர்ப்பு முறைமை உள்ளவர்களுக்கு 'கோவிட்-19'-இல் இருந்து தீவிர நோய்க்கு ஆளாகும் ஆபத்துமற்றவர்களுக்கு இருப்பதை விட அதிகம், மரணமடைவதற்கான அதியுயர் ஆபத்து இதில் உள்ளடங்கும்.

நிலைத்துவிட்ட HIV உள்ள ஒரு சிறு குழுவினரைத் தவிர, நோயெதிர்ப்புத் திறன் பாதிக்கப்பட்டவர்களை 'மொடெர்னா'-விற்காக மேற்கொள்ளப்பட்ட மருத்துவ-சிகிச்சை முயற்சிகள் உள்ளடக்கவில்லை. எஞ்சியுள்ள மக்களுடன் ஒப்பிடப்படும் பொழுது, நோயெதிர்ப்பு முறைமை பாதிக்கப்பட்டவர்களில் 'மொடெர்னா'-வின் செயலூக்கம் அதே அளவிற்கு இருக்குமா என்பது எமக்குத் தெரியாது. பொதுவான சனங்களில் 'மொடெர்னா'-விற்கு இருப்பதைப் போன்ற அதே செயலூக்கம் நோயெதிப்புத் திறன் பாதிக்கப்பட்டவர்களில் 'மொடெர்னா'-விற்கு இல்லாமலிருப்பதற்கான

சாத்தியம் உள்ளது. தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு, உடல்ரீதி விலகல் போன்ற மற்ற தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவரவேண்டும் என்பது முக்கியம்.

## கர்ப்பமாக இருக்கும், அல்லது தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்கள்

mRNA -வை அடிப்படையாகக் கொண்ட 'கோவிட்-19- தடுப்பூசிகளில் ஒன்று, 'ப்ஃபைசர்' அல்லது 'மொடெர்னா', கர்ப்பகாலத்தின் எவ்வொரு கட்டத்திலும் கர்ப்பிணிப் பெண்களுக்கும், வளர்-இளம்-பருவத்தினருக்கும் ஒரு வழமை போலக் கொடுக்கப்படவேண்டும். கர்ப்பம் அடைய நீங்கள் முயற்சித்துக்கொண்டிருந்தால், தடுப்பூசி இட்டுக்கொள்வதை நீங்கள் தாமதப்படுத்த வேண்டியதில்லை., அல்லது தடுப்பூசி இட்டுக்கொண்ட பிறகு கர்ப்பமடைவதை நீங்கள் தவிர்க்க வேண்டியதில்லை.

'கோவிட்-19' உள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு, தீவிர நோய்வாய்ப்படுவதற்கான ஆபத்தும், பாதகமான கர்ப்பகால விளைவுகள் ஏற்படுவதற்கான ஆபத்தும் அதிகமாக இருக்கும். கர்ப்பிணிப் பெண்களுக்கும், தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்களுக்கும் 'மொடெர்னா' பாதுகாப்பானது என்று யதார்த்த-உலக ஆதாரம் காண்பித்திருக்கிறது. தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கான நேரம் குறித்த உங்களுடைய முடிவினைப் பற்றி உங்களுடைய சுகாதாரத் தொழிலருடன் நீங்கள் கலந்து பேசலாம்.

நீங்கள் தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருந்தால், நீங்கள் 'மொடெர்னா'-வைப் பெறலாம். தடுப்பூசி இட்டுக்கொண்ட பிறகு நீங்கள் தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்த வேண்டியதில்லை.

## 'கோவிட்-19'-இற்கான வரலாறு உள்ளவர்கள்

கடந்த காலத்தில் உங்களுக்குக் 'கோவிட்-19' ஏற்பட்டிருந்தால், உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநருக்கு அதைத் தெரிவியுங்கள். நீங்கள் குணமடைந்த பிறகு 'கோவிட்-19' தடுப்பூசி ஒன்றை இட்டுக்கொள்வதற்கு முன்பாக ஆறு மாதங்கள் வரைக்கும் காத்திருக்குமாறு அவர் உங்களுக்கு அறிவுரைக்கலாம். 'கோவிட்-19' காரணமாக உங்களுக்குத் தொடர்ந்து நீடிக்கும் சுகவீனம் இருந்தால், தடுப்பூசி மருந்து இட்டுக்கொள்வதற்கு மிகவும் ஏற்ற நேரத்தைப் பற்றி உங்களுக்கு சிகிச்சையளித்துவரும் மருத்துவருடன் கலந்தாலோசியுங்கள்.

## 'மொடெர்னா' தடுப்பூசியும் குழந்தைகளும்

'மொடெர்னா'-வின் பயன்பாடானது 12வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்காக மட்டுமே தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, மற்றும் இதைவிடக் குறைந்த வயதுடையவர்களுக்கு இதைக் கொடுக்க இயலாது.

## 'மொடெர்னா'-வின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்

தடுப்பூசி ஆராய்ச்சிகளுக்காகஅதிகரிக்கப்பட்ட நிதியுதவி, மற்றும் ஆய்வுகளுக்காகக் கிடைத்த பெரும் எண்ணிக்கையிலான சுயவிருப்புத் தொண்டர்கள் ஆகியவற்றின் காரணமாக 'மொடெர்னா'-வும் மற்ற தடுப்பூசிகளும் சீக்கிரமாக உருவாக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 30,000 மக்களை ஈடுபடுத்திய பெரும் மருத்துவ-சிகிச்சை முயற்சியானது 'மொடெர்னா' பாதுகாப்பானதாகவும், செயலூக்கம் உள்ளதாகவும் இருப்பதாக உறுதிப்படுத்தியது.

ஆஸ்திரேலியாவிலுள்ள அனைத்துத் தடுப்பூசி மருந்துகளையும் ‘மருத்துவ-சிகிச்சைப் பொருட்கள் நிர்வாகம்’ (Therapeutic Goods Administration (TGA)) எனும் அமைப்பு மதிப்பீடு செய்கிறது. தடுப்பூசி மருந்து ஒன்று அங்கீகரிக்கப்படவேண்டும் என்றால், அது பாதுகாப்பானதாகவும், செயலூக்கம் உள்ளதாகவும், அதியுயர் தர-நிலை உள்ளதாக உற்பத்தி செய்யப்பட்டதாகவும் இருக்கவேண்டும் என்பதை இது உறுதிப்படுத்துகிறது. ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளுக்கான அங்கீகாரச் செயல்பாட்டு முறையின் விளக்கம் ஒன்றை TGAவலைத்தல (TGAwebsite) த்தில் காணலாம்.

‘கோவிட்-19’ தடுப்பூசியளிப்புத் திட்டம் நெடுக, ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளின் பாதுகாப்பு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டுவரும்.

’வாக்ஸ்ஜெவ்ரியா (ஆஸ்ட்ரா-ஸெனெகா) தடுப்பூசி’யை இட்டுக்கொண்ட பிறகு இரத்த உறைவு மற்றும் ‘குறைந்த இரத்த-வட்டு எண்ணிக்கை’ (low blood platelet count) ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட மிகவும் அரிதான பக்க விளைவு ஒன்று ஏற்பட்டிருக்கும் தருணங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா தடுப்பூசி’யானது ‘மொடெர்னா’ தயாரிக்கப்படும் முறையிலிருந்து வேறுபட்டமுறையில் தயாரிக்கப்படுகிறது. ‘மொடெர்னாகோவிட்-19 தடுப்பூசி’-யுடன் இந்த நிலை சம்பந்தப்பட்டிருப்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.

சந்தேகிக்கப்படும் பக்க விளைவுகளை உங்களுடைய தடுப்பூசி மருந்து வழங்குநர் அல்லது இதர சுகாதாரப்-பராமரிப்புத் தொழிலருக்கு நீங்கள் தெரியப்படுத்தலாம். அதையடுத்து அவர்கள் உங்கள் சார்பாக உங்களுடைய மாநில அல்லது எல்லைப்பகுதி சுகாதாரத் திணைக்களத்திற்கு, அல்லது நேரடியாக ‘மருத்துவ-சிகிச்சைப் பொருட்கள் நிர்வாக’(Therapeutic Goods Administration (TGA))-த்திற்கு சம்பிரதாயப்படியான அறிக்கை ஒன்றை ஏற்படுத்துவார்கள்.

அதை நீங்களே அறிவிக்க விரும்பினால், ‘கோவிட்-19’ தடுப்பூசிகளோடு சம்பந்தப்பட்ட சந்தேகிக்கப்படும் பக்க விளைவுகளை அறிவிப்பது எப்படி என்பதைப் பற்றிய தகவல்களைக் காண தயவு செய்து TGA வலைத்தல (TGA website) த்திற்குச் செல்லுங்கள்.